LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

B.A. DEGREE EXAMINATION – **TAMIL**

FIFTH SEMESTER – **NOVEMBER 2022**

UTL 5503 – HISTORY OF TAMIL LANGUAGE AND LITERARY CRITICISM

Date: 25-11-2022 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00 AM - 12:00 NOON

பகுதி – அ (10x2=20 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் இருபது சொற்களில் விடை எழுதுக.

01. மொழி என்றால் என்ன?
02. மொழிபற்றி, டாலிராண்ட் கூறும் கருத்து யாது?
03. திராவிட மொழிகளில் சில சுட்டுக.
04. இலக்கிய மொழி, பொது மொழிகளை வரையறுக்க.
05. கிரீன்லாந்து நாட்டில் பெயர் சூட்டல் சார்ந்து நிலவும் நம்பிக்கை யாது?
06. மனித வாழ்வில் அரிது அரிது எது? ஏன்?
07. உரிப்பொருள் என்றால் என்ன?
08. கலைக்கு இன்றியமையாத உறுப்புகளைக் குறிப்பிடுக.
09. மூன்று வகைக் கனவுகளைச் சுட்டுக.
10. இலக்கியம் சிறந்தது எனக் கூறக்காரணம் என்ன?

பகுதி – ஆ (5x7=35 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரை பக்க அளவில் விடை எழுதுக.

11. பேச்சு மொழியின் சிறப்புகள் குறித்து எடுத்தியம்புக.
12. மொழிக் கலப்பால் ஏற்படும் ஆபத்துகள் என்னென்ன?
13. தமிழின் தொன்மைச் சிறப்புக் குறித்து இயம்புக.
14. கலையின் பொறுப்பு என மு.வ. குறிப்பிடுவதைப் புலப்படுத்துக.
15. செய்யுள், உரைநடை என்பவை எவை? அவற்றின் சிறப்புகளை எழுதுக.
16. ஒலிநயத்தின் சிறப்புக் குறித்து எழுதுக.
17. உணர்ச்சிக்கும் யாப்புக்கும் உள்ள தொடர்பினைப் புலப்படுத்துக.

பகுதி – இ (3x15=45 மதிப்பெண்கள்)

மூன்று பக்க அளவில் விடை எழுதுக.

18. உணர்ச்சி, அறிவு, செயல் மூன்றும் மொழியோடு கொண்ட தொடர்பினைக் கட்டுரைக்க.
(அல்லது)
தமிழின் இலக்கணச் சிறப்பினைக் குறித்து விளக்குக.

19. ஆரிய மொழியினம் - திராவிட மொழியினம் வேறுபடுத்திச் சிறப்புகளை வரையறுக்க.
(அல்லது)
அறிவியலுக்கும் கலைக்கும் உள்ள வேறுபாட்டினை விரித்துரைக்க.

20. இலக்கியத்திற்கு உணர்ச்சி இன்றியமையாதது என்பதைக் கட்டுரைக்க.
(அல்லது)
இலக்கியத்திற்கு ஆராய்ச்சி மிக அவசியம் என்பதை விளக்கி எழுதுக.

&&&&&&&&&&&